# நோக்கு

நாட்டில் முதன்மை வாய்ந்த

அந்நிய செலாவணி ஈட்டும்

தாபனங்களில் ஒன்றாக விளங்குதல்




# பணி

தாபனம் பெற்றுக்கொள்ளக்கூடிய

அனைத்து பாரமான கனிப்பொருள்

கொண்ட கடற்கரை மணல்

வகைகளினதும் வேறு இயற்கை

வளங்களினதும் பெறுமதியை

உச்சப்படுத்துதல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தாபனத் தகவல்கள் | 01 - 02 |
| தகுதிவாய்ந்த அதிகாரியின் செய்தி | 03 |
| தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை | 04 - 07 |
| முக்கிய நிதிசார் தகவல்கள் | 08 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 09 |
| சுயேச்சைக் கணக்காய்வாளரின் அறிக்கை | 10 - 13 |
| நிதிக் கூற்றுக்கள் | 14 - 43 |

# *தாபனத் தகவல்கள்*

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர்கள | : | இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் |
| சட்ட அமைப்பு | : | இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமான வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். |
| நிறுவன பதிவு இல | : | PB 587 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய |
| தகுதிவாய்ந்த அதிகாரி | : | திரு. ரீ. அசோக்க பீரிஸ்<br>B.A. Hons பொருளியல் (பேராதெனிய)<br>M.S.S.C (களனி) |
| முகாமைத்துவக் குழு | : | திரு. எஸ். ஞானேஸ்வரன் - பிரதிப் பொது முகாமையாளர் (பொறி/செயற்பாடுகள்)<br>B.Sc. Eng.,<br>உறுப்பினர்-பொறியியலாளர் நிறுவகம் |
| | | திரு. எல்.எஸ். அபேரத்ன - பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)<br>கணக்கியல் மற்றும் நிதி -விசேட |
| | | திருமதி டப்ளியூ.கே. தமாரா - பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)<br>L.I.C.A., APFA |
| | | திரு. எம்.ஏ.ஐ.ஜீ. ஜயதிலக்க - பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்<br>L.I.C.A. |
| | | திரு. டப்ளியூ.டப்ளியூ. டீ. டபளியூ. குமார - வழங்கல் முகாமையாளர்<br>B.Sc. |
| | | திரு. பி.பீ.எம். விஜேபண்டார - சந்தைப்படுத்தல் முகாமையாளர்<br>B.Sc |

# தாபனத் தக்கவலள்

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வாளர் தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,<br>பொல்தூவ வீதி,<br>பத்தரமுல்லை |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி<br>ஹற்றன் நஷனல் வங்கி |
| செயலாளர்கள் | : | பீ.டப்ளியூ. கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) லிமிடட்,<br>3/17, கின்சி வீதி,<br>கொழும்பு- 08 |

# தகுதிவாய்ந்த அதிகாரியின் செய்தி

2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமாக்கப்பட்ட ஒரு நிறுவனமான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாவதுடன், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கீழ் தொடர்ந்து செல்லலாக இயங்குகின்றது.

இவ்வாண்டின் போது விற்பனைகள் 1,174 மி.ரூபாவாக இருந்ததுடன், வரிக்கு பின்னரான இலாபம் 154 மி. ரூபாவாக இருந்தது.

வருட இறுதியில் ஆளணிவலு 685ஆக இருந்தது. தொழிற்றுறை தொடர்பில் பெறுமதிமிக்க அறிவினை ஊழியர்கள் பெற்றுக் கொள்ள இயலுமான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் புதிய கனிப்பொருள் தளங்களை ஆராய்தல் போன்றவற்றின் மூலம் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் அதனூடாக வருவாயினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் அதற்கே உரிய நிதிகளை தொடர்ச்சியாக உருவாக்கிக் கொண்டுள்ளதுடன், நாளுக்கு நாள் பலமடையலாம் என்ற நம்பிக்கையையும் கொண்டுள்ளது.

பெறுமதி கூட்டல் எமது பிரதான நோக்கமாவதுடன், எதிர்வரும் ஆண்டில் திட்டமிட்ட இலக்குகளை அடைவதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், செயலாளர் அவர்கள், பணிக்குழாத்தினர் ஆகியோரால் வழங்கப்படும் ஆதரவும் உற்சாகமும் பெரிதும் பாராட்டுக்குரியவை ஆகும்.

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் பணிக்குழாத்தினருக்கு திட்டமிட்ட இலக்குகளை அடைவதற்கான அவர்களது அர்ப்பணிப்பிற்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம். குணரத்ன,
தகுதிவாய்ந்த அதிகாரி

# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியினால் 2016 திசெம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தமது அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வு அறிக்கையும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## பிரதான செயற்பாடுகள்

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் கூட்டுத்தாபன சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு அமைய பின்வரும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. பாரமான கனிப்பொருள் கொண்ட மணல் வகைகளை அகழ்தல், பிரித்தெடுத்தல், சுத்திகரித்தல் பதப்படுத்தல் போன்றன.
2. கரையோர பாரமான கனிப்பொருள் கொண்ட மணலைப் பயன்படுத்தி வர்த்தக அல்லது கைத்தொழில் பெறுமதி மிக்க பொருட்கள் அல்லது அதன் மூலம் உற்பத்தி செய்யத்தக்க ஏதேனும் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
3. கரையோர பாரமான கனிப்பொருள் கொண்ட மணலைச் சுத்திகரிக்கும் போது அல்லது பதப்படுத்தலின் போது ஏற்படும் பெறுபேறாக ஏதேனும் உப உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல

## உற்பத்தி

ஆண்டுக்கான உற்பத்திகளின் விபரங்கள் மெ. தொன்னில் பின்வருமாறு:

| | |
|---|---|
| இல்மனைற்று | 22,890 |
| ரூட்டைல் | 2,237 |
| சர்கோன் | 628 |
| Hi.Ti. இல்மனைற்று | 3,269 |
| காந்தமல்லா கழிவுகள் | 9,000 |
| பதப்படுத்தப்படா சர்கோன் உயர் தரம் | 2,996 |
| பதப்படுத்தப்படா சர்கோன் குறைந்த தரம் | 1,337 |
| பதப்படுத்தப்படா மொனசைட் | 21 |
| | 45,392 |

## விற்பனை

கனிப்பொருள் மணல் 113,730 மெ.தொ. விற்பனையால் 1,688 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டது.

| | மெ.தொ. | மி.ரூ. |
|---|---|---|
| இல்மனைற்று | 31,004 | 211 |
| ரூட்டைல் | 2,121 | 216 |
| சர்கோன் | 294 | 31 |
| Hi.Ti.இல்மனைற்று | 3,000 | 28 |
| சுருள் நுண் மண் | 2,900 | 132 |
| காந்தமல்லா கழிவுகள் | 9,000 | 191 |
| பதப்படுத்தப்படா சர்கோன் | 7,363 | 230 |
| பதப்படுத்தப்படா சர்கோன் உயர் தரம் | 1,975 | 90 |
| பதப்படுத்தப்படா சர்கோன் குறைந்த தரம் | 2,868 | 4 |
| பதப்படுத்தப்படா மொனசைட் | 400 | 41 |
| | 60,925 | 1,174 |

## விளைவுகளும் பங்கிலாபங்களும்

நிறுவனத்தின் வரிக்கு பின்னரான இலாபம் 154 மில்லியன் ரூபாவாகும். பொறித் தொகுதியின் 305 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க ஈர்க்கப்படாத

# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

மேந்தலைச் செலவுகள் இல்லாதிருந்தால் இலாபம் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் புல்மோட்டையில் இருந்து நேரடியாகக் கப்பலேற்ற முடியாமை ஆகியவையே ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்களுக்கு காரணமாகும்.

பங்கிலாபமாக 53.9 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

மில்லியன் ரூபா .

| | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 1,174 | 1,688 |
| மொத்த இலாபம் | 607 | 821 |
| தேறிய இலாபம் | 154 | 547 |

## ஆதனம், பொறித் தொகுதி, கருவிகள்

குறிப்பு 12இல் உள்ள விபரங்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்கள் ஆகியவற்றின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி, மூலப் பெறுமதியின் 43% ஆக உள்ள 1,186 மி. ரூபாவாக இருந்தது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை 245 மில்லியன் ரூபாவாகும். இது பொறித்தொகுதி மற்றும் இயந்திரோபகரணங்கள் பதிலீடு செய்யப்படுதல் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாண்டின் போது நிலையான சொத்துக்களுக்கு மேலதிகங்கள் 7 மில்லியன் ரூபாவாகும்.

## குறிக்கப்பட்ட மூலதனம்

80 மில்லியன் பங்குகளைக் கொண்டே வழங்கப்பட்ட மூலதனம் 800 மில்லியன் ரூபாவில் மாறுபடாமல் உள்ளது. எல்லா பங்குகளும் தனியே பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு சொந்தமானது. விபரங்கள் குறிப்பு இல 24இன் பிரகாரம் காணலாம்.

## ஒதுக்குகள் மற்றும் வைத்திருக்கப்படும் வருவாய்கள்

உற்பத்திக்கான செயற்பாடுகளில் மிதக்கும் படகுகள் இல்லாமையால் 111 மி. ரூபா ஒதுக்குகளிலிருந்து மாற்றம் இருந்துள்ளது.

## குறுங்கால நிதிசார் சொத்துக்கள்

குறுங்கால நிதிசார் சொத்துக்கள் 209 மில்லியன் ரூபாவில் இருந்து 19 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளன.

## வரி விதிப்பு

ஆண்டிற்கான அமுலில் உள்ள சாதாரண வரி வீதம் 28% ஆகும். எனினும், தாபனம் தமது ஏற்றுமதிகளுக்காக 12% சலுகை வரி வீதத்தினை அனுபவிக்கின்றது.

## பங்குத் தகவல்கள்

ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் 1.93 ரூபாவாக இருந்தது.

## நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் சரிப்படுத்தல்கள் செய்ய வேண்டிய எவ்வித நிகழ்வும் ஏற்படவில்லை.

## தொழில் கொள்கைகள்

2016.12.31ஆந் திகதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 685 ஆக இருந்தது. மீளாய்வாண்டினுள் முகாமை

# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

மனித வள முகாமைத்தவத்திற்கு கூடிய கவனஞ் செலுத்தியது.

பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள் 2016ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றன.

## நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

தகுதிவாய்ந்த அதிகாரியின் மிகச் சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய ஊழியர் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கும் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் குறிப்பிட்ட திகதியில் உரிய முறையில் செலுத்தியுள்ளதாக திருப்தி கொண்டுள்ளது.

## பணிப்பாளர் குழு

2015.09.29 ஆந் திகதியில் இருந்து அமுலாகும் விதத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் குழு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு மாற்றப்பட்டது.

திரு. ரீ. அசோக்க பீரிஸ்
2015.09.29 முதல் 2017.02.07

## எதிர்காலத் திட்டங்கள்

நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன. :-

- ❖ புதிய உற்பத்திகள் மற்றும் இடங்களுக்குள் திசைதிருப்புதல்
- ❖ பெறுமதி கூட்டல் உற்பத்திகளுக்கு விரிவுபடுத்துதல்
- ❖ கோக்கிளாய் வடக்கு பகுதியில் சுருள் ஈர்ப்புச் செறிவு ஆலையினை நிறுவுதல்.
- ❖ பணிக்குழாத்தினருக்கான மூன்று மாடி 12 அலகுகளைக் கொண்ட விடுதிகளின் நிர்மணப் பணிகளைப் பூர்த்தி செய்தல்.
- ❖ பணிக்குழாத்தினர் விடுதிகளைப் புதுப்பிப்பதைத் தொடருதல்.
- ❖ பணிக்குழாத்தினரின் நலன்புரி வசதிகளை அதிகரித்தல்.
- ❖ புல்மோட்டை, I.R.Z. பொறித்தொகுதிக்கு யான் ஓயா நீரேந்தியிலிருந்து மூல நீர் டிரான்ஸ்மிஷன் லைனிற்கான P.E குழாய்களை அமைத்தல் பணியினை பூர்த்தி செய்தல்
- ❖ உள்ளக மின்சார விநியோகிப்புத் தொகுதியினை நவீனமயப்படுத்தல்.
- ❖ சேதமடைந்துள்ள களஞ்சியசாலையினைப் பழுதுபார்த்தல்.
- ❖ ரூட்டைல் பொறித்தொகுதியினை நவீனமயப்படுத்தல்
- ❖ தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படும் கரையோரப் பகுதியினைப் பாதுகாப்பதற்கு கேபியன் மதிற் சுவரை அமைத்தல்
- ❖ உலர்ந்த சர்கோன் ஆலைக்கு fluidized bed dryerஇனைக் கையாளுதல்.
- ❖ தற்போதுள்ள பொறித் தொகுதியினை நவீனமயப்படுத்தலும் மேம்படுத்தலும்
- ❖ சர்வதேச ரீதியில் ஏற்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப ஆய்வுகூடத்தினை மேம்படுத்துதல்.
- ❖ ஈர உயர் அடர்த்தி இழுவிசைப் பிரிப்பான் பொறித்தொகுதியை நவீனமயப்படுத்துதல்.
- ❖ சிவில் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பட்டறைகளைத் தரமுயர்த்துதல்
- ❖ சர்கோன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஈர ஆலைகளில் 09 பழைய ஈர நடுவண்களைப் பதிலீடு செய்தல்

# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

- பகுதி "A"யின் கடல் நீர் பம்பும் குழாய்வழியினை மாற்றியமைத்தல்
- ஈர ஈர்ப்பு மேம்படுத்தல் பொறித் தொகுதி மற்றும் ஈர ஆலை சுருள் கழிவுகள் ஆகியவற்றின் கழிவுகளை மேம்படுத்துவதற்கு சுருள் ஈர்ப்புச் செறிவு பொறித் தொகுதியொன்றை நிறுவுதல்.

## தகுதிவாய்ந்த அதிகாரியின் பங்குடைமைகள்

தகுதிவாய்ந்த அதிகாரிக்கு நிறுவனத்தில் எவ்விதப் பங்குடைமையும் இல்லை. 100% பங்குடைமையும் பொதுத் திறைசேரி செயலாளருக்கு உரியதாகும்.

## கூட்டுச் சமூகப் பொறுப்பு

கூட்டுச் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக தாபனம் 59,000/= ரூபாவினை மாத்திரம் செலவழித்தது. சமூக சேமநல நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அனுசரணை வழங்கியது.

## ஒப்பந்தங்கள் தொடர்பாக தகுதிவாய்ந்த அதிகாரியின் கடப்பாடு

தாபனத்துடன் செய்துள்ள அல்லது செய்ய உத்தேசித்துள்ள எவ்வித ஒப்பந்தம் தொடர்பாகவும் தகுதிவாய்ந்த அதிகாரியின் நேரடி அல்லது மறைமுகக் கடப்பாடுகள் எதுவும் இல்லை.

## தாபன நிர்வாகம்/உள்ளகக் கட்டுப்பாடு

தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு குறித்து தமக்கு உள்ள பொறுப்பினை தகுதிவாய்ந்த அதிகாரி ஏற்றுக்கொள்கின்றார். தாபனச் சொத்துக்களின் பாதுகாப்பு, உரிய கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுதல், உருவாக்கப்பட்ட நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றை மற்றவற்றுக்கிடையில் உறுதிப்படுத்தும் விதத்தில் இம்முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், தவறுகள் மற்றும் ஒழுங்கின்மைகளை முற்றாக தடுத்துக் கொள்வதாக அன்றி, அவற்றைக் குறைத்துக் கொள்வதை சாதாரண கால எல்லைக்குள் கண்டறிவதையே எந்தவொரு உள்ளக நிர்வாக முறைமையினாலும் உறுதிப்படுத்த முடியும்.

நிதி அறிக்கைளை ஒப்பமிடும் நாள் வரையிலான கால எல்லைக்குள் உள்ளக நிர்வாக முறைமைகள் செயற்றிறன்மிக்கதாகச் செயற்பட்டதை இட்டு தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடைந்துள்ளார்.

## நிலைப்பாடு குறித்து அக்கறை

நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது நிலைப்பாடு குறித்து அக்கறையின் அடிப்படையில் தகுதிவாய்ந்த அதிகாரி செயலாற்றியுள்ளார்.

## கணக்காய்வாளர்கள்

2016 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வெளிவாரி கணக்காய்வாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம செயல்பட்டது.

## செயலாளர்கள்

வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ. கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) நிறுவனம் செயலாளர்களாக செயல்பட்டது.

சபை ஆணைப்படி,
வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ.
கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்)
லிமிடட்,
செயலாளர்கள்

# கடந்த ஐந்து வருடங்களுக்கான முக்கிய நிதிசார் தகவல்கள்

| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த விற்பனை வருவாய் | - மில். ரூபா | 1,985 | 679 | 1,220 | 1,688 | 1,174 |
| மொத்த இலாபம் | - மில். ரூபா | 1,628 | 500 | 694 | 821 | 607 |
| ஏனைய வருமானம் | - மில். ரூபா | 224 | 56 | 56 | 136 | 55 |
| வரிக்கு முன்னரான இலாபம் | - மில். ரூபா | 1,373 | 30 | 328 | 503 | 170 |
| வரிக்கு பின்னரான இலாபம் | - மில். ரூபா | 1,190 | 20 | 329 | 457 | 154 |
| ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்கள் | - மில். ரூபா | 292 | 358 | 259 | 277 | 305 |
| மொத்தச் சொத்துக்கள் | - மில். ரூபா | 2,029 | 2,400 | 2,829 | 2,764 | 3,100 |
| மொத்தப் பொறுப்புக்கள | - மில். ரூபா | 249 | 715 | 847 | 489 | 556 |
| பங்குடைமையாளரின் உரிமைப்பங்கு | - மில். ரூபா | 1,780 | 1,684 | 1,981 | 2,276 | 2,544 |
| வருமான வரி | - மில். ரூபா | 182 | 10 | (2) | 46 | 16 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | - மில். ரூபா | 1,700 | 43 | 14 | 158.5 | 54 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | 595 | 629 | 636 | 847 | 685 |
| உரிமைப்பங்கிற்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 77% | 2% | 17% | 22% | 7% |
| மொத்த சொத்துக்களுக்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 68% | 1% | 12% | 18% | 5% |
| நடப்பு வீதம் | | 5:1 | 2:1 | 2:1 | 4:1 | 4:1 |

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை

2016ஆம் ஆண்டு முழுதும் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் தகுதிவாய்ந்த அதிகாரியின் கீழ் செயல்பட்டது. பணிப்பாளர் சபை இல்லாது இருந்ததுடன், அதனால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டிக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இணை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் 2016 ஆகஸ்ட்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி நியமிக்கப்பட்டு தகுதிவாய்ந்த அதிகாரியால் தலைமை தாங்கப்பட்டது. இது 3 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், 5 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டினும், அதன் உறுப்பினர்களின் ஏனைய கடமைகள் காரணமாக எதுவும் நடாத்தப்படவில்லை. எவ்வாறெனினும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி கூட்டங்கள் 2017ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட உள்ளதுடன், 4 கூட்டங்கள் மீளாய்வின் கீழ் நடாத்தப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

எனது இல. / My No. } ஐஎம்யூ/ஏ/எல்எம்எஸ்எல்/1/16/எவ்ஏ     உமது இல. / Your No. }     திகதி / Date } 2018 பெப்ரவரி 07

தலைவர்
இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கம்பனியின் ("கம்பனி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   ag@auditorgeneral.gov.lk   www.auditorgeneral.gov.lk

மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 2011 நவம்பர் 09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2012 சனவரி 10 இல் வரையறுக்கப்பட்ட அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்ஆர்எம்சீஎல்) ரூபா 500,000,000 முற்பணத்தை கம்பனி வழங்கியிருந்த போதிலும் இவ் முற்பணத்திற்கான மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தல் எனக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அறிக்கையிடும் திகதி வரை மீள்கொடுப்பனவுகளெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இரண்டு தரப்பினர்களிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் (எம்ஓயூ) 5 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 500,000,000 முற்பணம் மற்றும் அவற்றின் மீது பெறவேண்டிய ரூபா 12,421,448 வட்டி தொடர்பான மீள்கொடுப்பனவு கால எல்லை அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், எம்ஓயூ இன் 6 ஆம் பிரிவின் பிரகாரம் எஸ்.ஆர்எம்சீஎல் மூலம் தவணை கடந்த விடயத்தில் செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு மூன்றாம் தரப்பினராக பொதுத் திறைசேரி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேவையான இணக்கப்பாடு பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருக்காததிலிருந்து அத்தகைய உட்கூறு செல்லுபடியற்றுள்ளது. இக் காரணிகள் காரணமாக குறிப்பிடப்பட்ட ரூபா 500,000,000 முற்பணம் மற்றும் ரூபா 12,421,448 பெறவேண்டிய வட்டி என்பவற்றின் அறவிடும்தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளதுடன் நட்டக்கழிவு, ஏதாவது இருக்குமாயின் நிதிக்கூற்றுக்களில் மதிப்பிடப்பட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) முன்னைய 2 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் சாதாரண கழிவாக கருதப்பட்ட மணல் மூலப்பொருளிருப்பை (கட்டுமானக் கல் கனிப்பொருள் கழிவு (block A tailings)) முகாமைத்துவம் இனங்கண்டு கணக்கீடு செய்திருந்ததுடன் இவ் இருப்பு கழிவு மணல் அமைப்பில் தற்போதுள்ள போதிலும் அதற்கிணங்க எதிர்கால உற்பத்திக் கிரயத்தை கருத்தில் கொள்வதன் மூலம் ரூபா 434,867,518 ஆக (2014 ஆம் ஆண்டில் ரூபா 159,562,130 ஆகவும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 152,791,602 ஆகவும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 122,513,786 ஆகவும்) இது பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் மீளக் குறிப்பிடப்பட்டிருந்தன. கம்பனியால் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி கணிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம், இந்த மூலப்பொருளிருப்பு 7.88 சதவீத கனிப்பொருள் உள்ளடக்கத்தை மாத்திரம் கொண்டிருந்தது. ஆனால் ஆகக்குறைந்தது 40 சதவீத கனிப்பொருள் உள்ளடக்கத்தை கொண்டுள்ள மணலை செயன்முறைப்படுத்துவதற்கு

தற்போதைய இயந்திரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆகையால், கனிப்பொருள் உள்ளடக்கத்தை பிரித்தெடுப்பதற்கு மணல் மூலப்பொருளிருப்பை கம்பனி செயன்முறைப்படுத்துமா என்பதற்கு கணிசமானளவு நிச்சயமற்ற தன்மை காணப்பட்டதுடன் அதனால் ஆண்டிறுதியில் உள்ளவாறு குறிப்பிடப்பட்ட இருப்பின் பெறுமதி கணிப்பீடு தவறாக குறிப்பிடப்பட முடிந்திருந்தது. மேலும், கழிவுகளை செயன்முறைப்படுத்துவதற்கு கம்பனியின் உயர் மட்ட முகாமைத்துவம் தந்திரோபாய தீர்மானம் எதனையும் எடுத்திருக்காதமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், சீராக்கப்பட்ட இருப்புப் பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு அதன் பதவியணியினரிற்கு ரூபா 1,815,896 ஊக்குவிப்புப் படியினை கம்பனி செலுத்தியிருந்தது.

(ii) மேற்படி இருப்புச் சீராக்கத்தின் விளைவாக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் ரூபா 122,513,786 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் இச்சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் ரூபா 4,352,211 செயற்பாட்டு நட்டமாக இருக்கும்.

(இ) விற்பனை செய்யப்படாத இருப்புக்களுடன் தொடர்புபட்ட நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய கிரயம் இருப்புக்களின் பெறுமதி கணிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்புக்களின் பெறுமதி கணிப்பீட்டிற்காக ரூபா 305,270,258 தொகையான உள்ளீர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்களை கருத்திற்கொள்வதற்குப் பதிலாக விரிவான வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் கீழ் அதனை கம்பனி இனங்கண்டிருந்தது. **இலங்கை கணக்கீட்டு நியமங்கள், எல்கேஏஎஸ் 02 - இருப்புக்களின்** தேவைப்பாடுகளுடன் இது இணங்கியிருக்காததனால் ஆண்டிறுதியிலுள்ளவாறான இருப்பின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) **எல்கேஏஎஸ் 18 – வருமானத்தின்** தேவைப்பாடுகளின் பிரகாரம், வாங்குபவரிற்கு பொருட்களின் உரிமைத்துவத்தின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை மாற்றும் போது கம்பனி வருமானத்தை இனங்கண்டு கொள்ள வேண்டும். வாங்குபவர்களுடன் இணங்கிக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் தொழிற்சாலையிலிருந்து பொருட்கள் அனுப்பப்படும் போது பொருட்களின் உரிமைத்துவத்தின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் வாங்குபவரிற்கு மாற்றப்படுகின்றன. எவ்வாறாயினும், கப்பல் சரக்குப் பட்டியல் பெறப்பட்டதன் பின்னர் வணிக ரீதியான சிட்டைகள் உயர்வடைந்த நேரத்தில் கம்பனி வருமானத்தை இனங்காணுகின்றமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், வெட்டிக் குறைத்தலின் பிழையான பிரயோகம் காரணமாக வருமானத்தை இனங்காணுவதில் தாமதம் காணப்பட்டது. வெட்டிக் குறைத்தல்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை



பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு தேவைப்பட்ட சுமைச்சீட்டுக்கள் எனக்கு வழங்கப்படாததிலிருந்து இவ் பிறழ்கூற்றின் தாக்கத்தை என்னால் அளவிட முடியாதிருந்தது.

**மறுப்பு அபிப்பிராயம்**

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:
மேலே குறிப்பிடப்பட்டவாறு கணக்காய்விற்கு அவசியமான எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்காததால் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

**பராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **மொத்த வருவாய்** | 3 | 1,173,915,676 | 1,688,079,113 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | (326,289) | (184,815) |
| **தேறிய வருவாய்** | | 1,173,589,387 | 1,687,894,298 |
| விற்பனைச் செலவு | 4 | (566,332,585) | (866,415,748) |
| **மொத்த இலாபம்** | | 607,256,802 | 821,478,550 |
| ஏனைய தொழிற்படு வருமானம் | 5 | 3,083,602 | 65,927,211 |
| | | 610,340,404 | 887,405,761 |
| விநியோக செலவுகள் | 6 | (6,633,016) | (14,163,023) |
| நிர்வாகச் செலவுகள் | 7 | (170,221,121) | (163,079,380) |
| ஏனைய தொழிற்படு செலவினங்கள் | 8 | (315,324,692) | (277,045,734) |
| | | (492,178,829) | (454,288,137) |
| தொழிற்படு இலாபம் | | 118,161,575 | 433,117,624 |
| நிதி வருமானம் | 9 | 52,337,064 | 69,636,884 |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | | 170,498,639 | 502,754,508 |
| வருமான வரிச் செலவுகள் | 10 | (16,360,033) | (45,984,819) |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு பின்னரான இலாபம்** | | 154,138,606 | 456,769,689 |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | 154,138,606 | 456,769,689 |
| **ஏனைய விபரமான வருமானங்கள் (இலாபம் அல்லது நட்டத்திற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத உருப்படி)** | | | |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் மீதான தேறிய காப்புறுதி மதபீட்டு இலாபம் (நட்டம்) | | 2,859,003 | (3,873,677) |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானங்கள்** | | 156,997,609 | 452,896,012 |
| **பங்கொன்றிற்கான அடிப்படை வருவாய்** | 11 | 1.93 | 5.71 |

01 முதல் 39 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் | 12 | 758,802,341 | 779,562,362 |
| குத்தகைக்கு எடுத்த சொத்துக்கள் | 13 | 21,645,046 | 22,476,452 |
| அருவச் சொத்துக்கள் | 14 | 357,054 | 258,250 |
| முற்பணம் | 15 | 557,421,448 | 554,921,448 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | 1,338,225,889 | 1,357,218,512 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் | 16 | 948,590,005 | 800,158,127 |
| குறுங்கால நிதிச் சொத்துக்கள் | 17 | 18,981,226 | 208,640,110 |
| நிலையான வைப்புக்கள் | 18 | 365,313,874 | ------- |
| முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் | 19 | 46,955,953 | 14,414,611 |
| முன்செலுத்தப்பட்ட செலவினங்கள் | 20 | 32,618,903 | 35,444,787 |
| ஏனைய கிடைப்பனவுகள் | 21 | 302,938,689 | -------- |
| வருமான வரி கிடைப்பனவுகள் | 22 | 20,918,976 | 330,084,215 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 23 | 25,353,081 | 18,457,054 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 1,761,670,707 | 1,407,198,904 |
| **மொத்த சொத்துக்கள்** | | 3,099,896,596 | 2,764,417,416 |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமைப்பங்கு** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 24 | 800,000,000 | 800,000,000 |
| ஏனைய ஒதுக்குகள் | 25 | 906,544,343 | 1,017,544,343 |
| வைத்திருக்கப்படுகின்ற வருவாய்/(நட்டம்) | 26 | 837,317,294 | 458,024,737 |
| **மொத்த பங்குதாரர் உரிமைப் பங்கு** | | 2,543,861,637 | 2,275,569,080 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் | 27 | 58,424,744 | 63,551,328 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 28 | 48,460,989 | 32,100,956 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 29 | --------- | 6,096,184 |
| | | 106,885,733 | 101,748,468 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய கடன் வழங்குவோர் | 30 | 404,937,520 | 306,930,104 |
| ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள் | 31 | 44,211,706 | 80,169,764 |
| குறுங்காலக் கடன் | 32 | --------- | --------- |
| | | 449,149,226 | 387,099,868 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 556,034,959 | 488,848,336 |
| **மொத்த உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | 3,099,896,596 | 2,764,417,416 |

2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் -திருமதி டப்ளியு.கே. தமாரா -**தலைமை நிதி உத்தியோகத்தர்**

இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது. சபையின் சார்பாகவும் அதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

ஒப்பம்- திரு. எம். குணரத்ன - **தகுதிவாய்ந்த அதிகாரி**

திகதி: 2017 ஒக்டோபர் 24

01 முதல் 39 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

ரூபா

| | குறிக்கப்பட்ட மூலதனம் | வைத்திருக்கப்படுகின்ற வருவாய் | மிதவைப்படகு காப்புறுதி ஆழ் நிதிய ஒதுக்கு | பதிலீடு /தரமுயர்த்தல் பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் ஆழ் நிதிய ஒதுக்கு | தலைமை அலுவலகக் கட்டட ஆழ் நிதிய ஒதுக்கு | சுனாமி பழுதுபார்த்தல் ஆழ் நிதிய ஒதுக்கு | ஊழியர் ஒதுக்கு நஷ்டஈட்டு ஆழ் நிதிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2015 **ஜனவரி 01** **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 206,233,360 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 2,023,777,703 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | ------- | 587,233,348 | ------- | ------- | ------- | ------- | ------- | 587,233,348 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | ------- | (3,873,677) | ------ | ------- | ------- | ------- | ------- | (3,873,677) |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | ------- | (158,500,000) | ------ | ------- | ------- | ------- | ------- | (158,500,000) |
| 2015.**திசெம்பர்** 31 **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 631,093,031 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 2,448,637,374 |
| 2016 **ஜனவரி 01** **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 631,093,031 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,448,637,374 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | ------- | 154,138,606 | ------- | ------- | ------- | ------- | ------- | 154,138,606 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | ------- | 2,859,003 | ------- | ------- | ------- | ------- | ------- | 2,859,003 |
| மிதவைப்படகு ஆழ் நிதிய செம்மையாக்கம் | ------- | 111,000,000 | (111,000,000) | ------- | ------- | ------- | ------- | ------ |
| W.H.T செம்மையாக்கம் | ------- | 163,066 | ------- | ------- | ------- | ------- | ------- | 163,066 |
| Y/A 2015/2016 வருமான வரி ஏற்பாட்டின் கீழ் | ------- | (7,988,412) | ------- | ------- | ------- | ------- | ------- | (7,988,412) |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | ------- | (53,948,000) | ------- | ------- | ------- | ------- | ------- | (53,948,000) |
| 2016 **திசெம்பர்** 31 **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 837,317,294 | -------- | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,543,861,637 |

01 முதல் 39 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|
| **வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | 170,498,639 | 502,754,508 |
| **சீராக்கல்கள்** | | |
| பெறுமானத்தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | 75,839,656 | 76,021,456 |
| வட்டி வருமானம் | (52,337,064) | (69,636,884) |
| பணிக்கொடை | 11,708,997 | 10,517,230 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | (256,203) | (234,357) |
| ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி இழப்பு | ------ | --------- |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் விற்பனை மீதான இலாபம் | (1,025,093) | (1,977,103) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 204,428,932 | 517,444,849 |
| பொருட்பதிவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 28,441,335 | 160,600,261 |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (244,804,859) | (13,533,799) |
| வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 62,049,358 | (454,821,613) |
| கடன் வசதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | --------- | (72,797,811) |
| **செயற்பாடுகளில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட பணம்** | 50,114,766 | 136,891,887 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (13,720,373) | (13,187,595) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (30,893,654) | (5,748,387) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | 5,500,739 | 117,955,906 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| முதலீடுகளில் உள்ள வைப்புக்கள் | 114,113,335 | 151,929,023 |
| வட்டி வருமானம் | (52,337,064) | 69,636,884 |
| முடிவுறாத மூலதன வேலை | (52,106,097) | (192,226,654) |
| சொத்து, பொறித் தொகுதி, கருவிகள் மற்றும் அருவச் சொத்துக்களைக் கைப்பற்றுதல் | (4,568,344) | (148,648,727) |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகளை அகற்றுவது மூலம் பெற்ற தொகை | 1,794,197 | 2,041,434 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | 6,896,027 | (117,268,040) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்திய பங்கிலாபம் | --------- | (14,000,000) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | --------- | (14,000,000) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை மீதான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு)** | 6,896,027 | (13,312,134) |
| வருட ஆரம்ப காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 18,457,054 | 31,769,187 |
| **இறுதிக் காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 25,353,081 | 18,457,054 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையின் பகுப்பாய்வு** | | |
| வங்கியிலிருக்கும் பணம் | 25,178,229 | 18,275,903 |
| கையிருப்பில் உள்ள பணம் | 154,852 | 161,151 |
| சில்லறைப் பணம் | 20,000 | 20,000 |
| | 25,353,081 | 18,457,054 |

01 முதல் 39 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2016 திசெம்பர் 31ஆந் திகதியுடன் ஆண்டிற்கானது

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான வியாபார நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

பாரமான கனிப்பொருள் மணலை அகழ்தல், பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியனவே கம்பனியின் பிரதான செயற்பாடாகும்.

### 1.3 ஊழியர் எண்ணிக்கை

வருட இறுதியில் தாபனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 685 ஆகும். (2015இல் 847ஆக இருந்தது.)

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 தயாரித்தலின் அடிப்படை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் - SLFRSs) இணங்க தயார் செய்யப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்கள் சரித்திரச் செலவு மரபின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRSs) அனுகூலமாகத் தயாரிக்கும் போது நம்பகமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். அத்துடன், முகாமை கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறைகளின் போது, முகாமையின் தீர்ப்புக்களும் அடிப்படையாகக் கொள்ளப்படும். இவ்வாறு பிரயோகிக்கப்படும் மேற்படி உயர் முகாமைத்துவ தீர்ப்புகள்அல்லது சிக்கல்கள் தொடர்பான விடயப்பரப்புக்கள் அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் உள்ள பகுதிகள் என்பன குறிப்பு இல 2A யில் காட்டப்பட்டுள்ளன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கடந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன சிறந்த சமர்ப்பித்தலுக்காவும் நடப்பு ஆண்டில் ஏனையவற்றுக்கு சமமாக இருக்கக் கூடிய விதத்திலும் திருத்தப்பட்டுள்ளன.

### 2.3 வெளிநாட்டு நாணய மற்றம்

#### 2.3.1 முன்வைத்தல் மற்றும் தொழிற்படு நாணயப் புழக்கம்

இந்நிதிக் கூற்றுக்களில் உள்ள கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள் என்பன நிறுவனம் செயற்படும் ஆரம்ப பொருளாதாரச் சூழலுக்குரிய நாணயத்தினைப் பயன்படுத்தி அளவிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் சமர்ப்பிப்பதற்கான புழக்கதில் இருக்கும் நாணயமான இலங்கை ரூபாயைப் (LKR) பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.3.2 கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள்

கொடுக்கல் வாங்கல் நடைபெறும் தினத்தில் நிலவிய செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு நாணயத்தினால் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வாறான சரிப்படுத்தல்களின் விளைவாகவும் வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வருட இறுதி மாற்றல் வீதங்களின் மாற்றங்களாலும் ஏற்படக்கூடிய அந்நிய செலாவணி இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

### 2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன நிறுவனத்தின் முகாமையால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொள்கொள்ளும் செலவுகள் உள்ளடங்களாக ஆரம்பத்தில் செலவினத்தில் பதியப்பட்டன.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றை கழித்து வரும் பெறுமதியில் கணிப்பிடப்பட்டன.

அச்செலவினால் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுகாலத்தை நீடிக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவோ அல்லது சொத்தாகவோ இனங்காணப்படுவதுடன், தாபனத்தால் அச்செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. ஏனைய எல்லா சொத்துக்களையும் நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்:

| | | |
|---|---|---|
| வேலைத்தள அபிவிருத்தி | 20 வருடங்கள் | 5% |
| கட்டடங்கள் | 20 வருடங்கள் | 5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் | 10 வருடங்கள் | 10% |
| தளர்வான கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 5 -6.5 வருடங்கள் | 15%-20% |
| நீர் வழங்கல் | 10 வருடங்கள் | 10% |
| மிதவைப் படகுகள் | 10 வருடங்கள் | 10% |
| சகதிச் சுரங்கங்கள் | 4 வருடங்கள் | 25% |
| கணினி வன்பொருள் | 4 வருடங்கள் | 25% |

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவுசெய்யப்படும்.

## 2.5 அருவச் சொத்துக்கள்

விசேட கணினி மென்பொருள் மற்றும் முறைமைகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளும் செலவு கைப்பற்றப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் தொழிற்படும் தொகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட அருவச் சொத்துக்கள் செலவிலிருந்து திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் கணிக்கப்பட்டுள்ளன. இச்செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் பின்வருமாறு கடன் கழிப்பு செய்யப்படும்:-

| | | |
|---|---|---|
| கணினி மென்பொருள் | 4 வருடங்கள் | 25% |

கணினி மென்பொருள் பேணல் தொடர்பான செலவினங்கள் குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட காலத்தின் செலவாகக் கருதப்படும்.

## 2.6 நிதி சாரா சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் தாபனத்தால் அதன் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மற்றும் அருவச் சொத்துக்கள் மீதான காவுகைப் பெறுமானங்கள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதுடன், அச்சொத்துக்கள் தொடர்பாக ஏதேனும் பெறுமதி இழப்புக்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஏதேனும் அறிகுறிகள் இருப்பின், பெறுமதி இழப்பு நட்ட(இருப்பின்) அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய சொத்தின் மீளக் கிடைக்கக் கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு சொத்தினதும் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்யவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் பண உருவாக்கற் கூறாகக் கருதி, சொத்துக்கள் உரியதாகும் காசு உருவாக்கற் கூறின் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்ய தாபனம் முடிவு செய்யும்.

விற்பனை மீதான செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியையும் நடப்பிலுள்ள பெறுமதியையும் விடக் கூடுதலான பெறுமதியே மீள் அறவிடக்கூடிய பெறுமதி ஆகும். நடப்பிலுள்ள பெறுமதியை மதிப்பீடு செய்கையில், வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப்பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிக்கப்படும். அக்கழிவு வீதம் பணத்தின் மீதான காலப் பெறுமதியின் நடப்பிலுள்ள சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் செம்மைப்படுத்தப்படாத மதிப்பீடுகளுக்கான சொத்துக்களில் குறிப்பிட்ட இழப்பு நேரிடக்கூடிய நிலையையும் பிரதிபலிக்கின்றன.

ஒரு சொத்தின் மீள அறவிடக்கூடிய தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் காவுகைத் தொகையைவிடக் குறைவாக மதிப்பபீடு செய்யப்படும், சொத்தின் காவுகைத் தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் மீள அறவீட்டுத் தொகைக்கு குறைக்கப்படும். பெறுமதி அழப்பு நட்டமானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப்படும்.

## 2.7 நிதிச் சொத்துக்கள்

### 2.7.1 வகைப்படுத்துதல்

ஆரம்ப இனங்காணலாக தாபனம் அதன் நிதிச் சொத்துக்களை கடன்களாகவும் வருமதிகளாகவும் வகைப்படுத்தலை பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றது:

#### கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன நிரந்தரமாகவும் உறுதியாகவும் செயற்படு சந்தையில் பட்டியலிடப்படாத மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். நடைமுறையற்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்கு பின்னரான 12 மாதங்களை விடக் கூடிய முதிர்ச்சிகளைத் தவிர, கடன்களும் வருமதிகளும் நடைமுறைச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றன. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியின் போதுள்ள வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், மீள்கொள்வனவு செய்யக்கூடிய அரசாங்கப் பிணைகள், அரச நிறுவனங்களில் முதலீடுகள், தற்காலிக மிகை நிதியம், முற்கொடுப்பனவுகள், வைப்புக்கள், ஊழியர்க்கு வழங்கிய கடன்கள், காசும் காசுக்கு சமமானவையும் ஆகியவை தாபனத்தின் கடன்கள் மற்றும் வருமதிகளில் உள்ளடங்குகின்றன.

### 2.7.2 இனங்காணல் மற்றும் ஆரம்ப மதிப்பீடு

கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள், தாபனம் கொடுக்கல் வாங்கலில் முதலில் ஈடுபட்ட நாளிலேயே வகைப்படுத்தப்படும். நிதிச்சொத்தொன்று ஆரம்பத்தில் நியாயமான பெறுமானத்தையும் நேரடி கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் கூட்டுவதன் மூலம் மதிப்பிடப்படும்.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமை காலாவதியாகும் போது அல்லது வேறு தரப்பினருக்கு மாற்றும் போது மற்றும் தாபனம் நிதிச் சொத்துக்களின் எல்லா ஐயப்பாடானதும் விளைவுமிக்கதுமான உரிமையுடைமையினை மாற்றிய போதும் நிதிச்சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படும்.

### 2.7.3 பிற்கால மதிப்பீடு

ஆரம்ப இனங.காணலின் பின்னர், கடன்களும் வருமதிகளும் விளைபயன்மிக்க வட்டி முறைமையைப் பயன்படுத்தி பெறுமதி இழப்பினைக் கழித்து கடன் கரைப்புச் செலவில் அளவிடப்படும்.

### 2.7.4 நிதிச் சொத்துக்களளின் பெறுமதி இழப்பு
கடன் கரைப்புச் செலவு மீதான சொத்துக்கள்

தாபனம் எல்லா அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். சொத்தின் ஆரம்ப வகைப்படுத்தலின் பின்னர் (நட்ட நிகழ்வு) நடைபெறும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக தெளிவான ஆதாரம் இருந்தாலேயே, நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படும் அல்லது பெறுமதி இழப்புக்கு ஆளாகும். மேலும் அந்நட்ட நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகமான முறையில் மதிப்பிடப்படக் கூடிய நிதிச் சொத்துக்கள் மீதான மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.

கடன் கரைப்புச் செலவில் மேற்கொள்ளப்படும் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான இழப்புத் தொகை, நிதிச் சொத்துக்களின் மூல விளைபயன் மிக்க வரி வீதத்தில் கழிக்கப்பட்டு (இன்னும் நடைபெற்றிராத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர்ந்த) சொத்துக்களின் காவுகைத் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால் காசுப் பாய்ச்சல்களின் நடப்பிலுள்ள பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும். நிதிச் சொத்துக்களின் காவுகைத் தொகையானது கழிக்கப்படுவதுடன், நட்டத் தொகையானது விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

பிற்காலப்பகுதியில் பெறுமதி இழப்பு நட்டங்கள் குறைந்தாலோ மற்றும் பெறுமதி இழப்பு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்படும் நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடிந்தாலோ முன்பு இனங்காணப்பட்ட பெறுமதி இழப்புவட்டத்தின் பின்னடைவு விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

### 2.8 இருப்புக்கள் பதிவு

இருப்புக்கள் பதிவு குறைந்த செலவில் அல்லது தேறிய பணமாக தேறும் பெறுமதியில் குறிக்கப்படும். செலவு நிறையளிக்கப்பட்ட சராசரி செலவு (WAC) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தேறிய பணமாகத் தேறக்கூடிய பெறுமதியானது எல்லா மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை பூர்த்தியாகும் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்குத் தேவையான செலவு ஆகியவற்றை சரக்கிருப்புக்களுக்கான விற்பனை விலையை கழித்து மதிப்பீடு செய்யப்படும்.

### 2.9 வர்த்தக வருமதிகள்

வர்த்தக வருமதிகளாவன சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் விற்கப்பட்ட பொருட்களுக்கான வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாகும்.

வர்த்தக நடவடிக்கைகளின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் சேகரித்தல் எதிர்பார்க்கப்படுவதுடன், அவை நடைமுறைச் சொத்தக்களாக வகைப்படுத்தப்படும்.

வர்த்தக வருமதிகள் ஆரம்பத்தில் விலைப்பட்டியல் பெறுமானமான நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டதன் பிற்பாடு பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடுகளை கழித்து முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டன.

தாபனம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் வர்த்தக வருமதிகளில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். வர்த்தக வருமதிகளுக்கான பெறுமதி இழப்பின் தெளிவான ஆதாரத்தில் கொடுப்பனவுகள் சேகரித்தல் மீதான தாபனத்தின் கடந்த கால அனுபவங்கள், தாமதித்த கொடுப்பனவுகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பன அடங்குகின்றன. வர்த்தகக் கிடைப்பனவுகளில் பெறுமதி இழப்பு ஏற்படும் மற்றும் பெறுமதி இழப்புக்கான தெளிவான ஆதாரம் இருந்தாலேயே பெறுமதி இழப்பிற்கு ஆளாகும்.

## 2.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல்கள் மீதான கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளில் கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள கோரிக்கை வைப்புக்கள், மூன்று அல்லது அதற்கு குறைவான மாத ஆரம்ப முதிர்ச்சிகளைக் கொண்ட ஏனைய குறுங் கால திரவத்தன்மைமிக்க முதலீடுகள் என்பன அடங்கும்.

## 2.11 குறிக்கப்பட்ட மூலதனம்

குறிக்கப்பட்ட மூலதனம் வெளியிடப்பட்ட பங்குகள் மீதான பெறுமதியைக் குறிக்கும். சாதாரண பங்குகள் உரிமைப் பங்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.12 நிதிசார் பொறுப்புக்கள்

தாபனம் நிதிசார் பொறுப்புக்களை ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வகைப்படுத்துகின்றது. தாபனத்தின் ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. ஆரம்பத்தில் ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியுடன் நேரடிப் பகிரக்கூடிய கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டுவதன் மூலம் இனங்காணப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

தாபனம் நிதிசார் பொறுப்பொன்றை அதன் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் தீர்க்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது இனங்காண்பதை நிறுத்தும்.

## 2.13 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்களிடமிருந்து சாதாரண வர்த்தக நடக்கைகளின் போது பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். வர்த்தக மற்றும்' ஏனைய கொடுப்பனவுகள் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் இருப்பதால் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையான நியாயமான விலையில் இனங்காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

## 2.14 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

இது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியைக் கொண்ட காலப்பகுதிக்கான வரிச் செலவு ஆகும். விபரமான வருமானக் கூற்றில் வரி வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய விபரமான வருமானங்களுக்குரிய உருப்படிகளுக்கு தொடர்பான அளவுக்கு மாற்றமாக,

வரியானது விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. இவ்வகையில், வரி ஏனைய விபரமான வருமானத்திலும் இனங்காணப்பட்டுள்ளது.

நடைமுறை வருமான வரிக் கட்டணம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் தாபனத்திற்கும் வரி விதிக்கக்கூடிய வருமான உருவாக்கத்திற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிக்கப்படும். வரி அதிகார சபைகளுக்கு செலுத்த வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட தொகைகளின் அடிப்படையில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தாபனம் ஏற்பாடுகளை ஒதுக்கியுள்ளது.

பிற்போடப்பட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள் மீதான வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் காவுகைத் தொகைகளுக்கும் இடையில் எழும் தற்காலிக வித்தியாசங்கள் மீது இனங்காணப்படும். அக் கொடுக்கல் வாங்கலினால் கணக்கீடோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபமோ அல்லது நட்டமோ பாதிப்படையாத சந்தர்ப்பத்தில் இருக்க கூடிய வர்த்தக ஒருங்கிணைப்பு தவிர கொடுக்கல் வாங்கலில் சொத்தின் அல்லது பொறுப்பின் ஆரம்ப இனங்காணலிலிருந்து எழுந்தால் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படமாட்டாது. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதி நாளில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பிற்போடப்பட்ட வரி நிறைவேற்றப்படும் போது அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்படும் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தக்கூடிய எதிர்காலத்தில் வரியில்லா இலாபம் கிடைக்கும் எனக் கருதக்கூடியதாயின் மாத்திரமே இனங்காணப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை குறைநிரப்புவதற்கு சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் போதும் அதே வரிவிதிப்பு அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வருமான வரிகள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பிற்போடப்பட்ட வரிகள் உள்ள போதும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைநிரப்பப்படுகின்றன.

### 2.15 ஊழியர் நலன்கள்

தாபனம் நிலையான நன்மைகள் மற்றும் நிலையான பங்களிப்பு திட்டங்களைக் கொண்டுள்ளது.

### 2.15.1 நிலையான பங்களிப்புத் திட்டம்

நிலையான பங்களிப்புத் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு நிலையான பங்களிப்புக்களைத் தாபனம் செலுத்தும் திட்டமாகும். தாபனம் மேலதிகப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு எவ்வித சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான பொறுப்பினையோ கொண்டிருப்பதில்லை. பங்களிப்புக்கள் செலுத்த வேண்டும் போது ஊழியர் நலன் செலவாக இனங்காணப்படும்.

தாபனம் ஊரியரின் மொத்த ஊதியத்திலிருந்து 12%இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் *(EPF)* மொத்த ஊதியத்தின் 3%இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியதிற்கும் *(ETF)* பங்களிக்கின்றது.

### 2.15.2 நிலையான நலன்கள் திட்டம்

